

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (29.7.2023) முகாம் அலுவலகத்தில், இலங்கை நாட்டின் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஆ. ஜீவன் தொண்டமான் அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, பொதுத்துறை செயலாளர் க. நந்தகுமார், சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்தின் துணைத் தூதர் டாக்டர் வெங்கடேஸ்வரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (28.7.2023) அண்ணா அறிவாலயத்தில் தென்காசி தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட ஜெயபாலன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கழக பொதுச் செயலாளர் துரைமுருகன், அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.7.2023) சென்னை, எழும்பூர், மேயர் இராதாகிருஷ்னான் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் 16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட ஹாக்கி விளையாட்டரங்கம் (Upgraded Hockey Stadium), ஒலிம்பிக் தரத்திலான புதிய செயற்கை இழை மைதானம் (Olympic Standard New Synthetic Turt) மற்றும் கலைஞர் நூற்றாண்டு பார்வையாளர் மாடம் (Kalaignar Centenary Pavilion) ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், தாயகம் கவி, த.வேலு, ஜோசப் சாமுவேல், எம்.கே. மோகன், ஆர்.டி.சேகர், ஏ.எம்.வி. பிரபாகர ராஜா, ஜே.ஜே.எபினேசர், துணை மேயர் மு.மகேஷ் குமார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மரு. ஜெ.ராதாகிருஷ்னான், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஹாக்கி இந்தியா தலைவர் டாக்டர் திலீப் குமார் திர்கி, பொருளாளர் சேகர் ஜெ. மனோகரன், இந்திய ஹாக்கி அணி தேர்வாளர் முகமது ரியாஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (28.7.2023) முகாம் அலுவலகத்தில், கழக துணை பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா கழக இளைஞர் அணி மாநில, மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தில் நிர்வாகிகளுக்கு வழங்குவதற்காக தான் தொகுத்த "அறிவோம் திராவிடம்" என்ற 20 புத்தகங்கள் அடங்கிய பெட்டகத்தை வழங்கினார். உடன் கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உள்ளார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.7.2023) சென்னை, எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் 16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட ஹாக்கி விளையாட்டரங்கம் (Upgraded Hockey Stadium), ஒலிம்பிக் தரத்திலான புதிய செயற்கை இழை மைதானம் (Olympic Standard New Synthetic Turf) மற்றும் கலைஞர் நூற்றாண்டு பார்வையாளர் மாடம் (Kalaignar Centenary Pavilion) ஆகியவற்றை திறந்து வைத்து பார்வையிட்டார்.

### 'நெக்ஸ்ட்' தேர்வை ரத்து செய்ய வேண்டும்!

# மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கோரிக்கை!

புதுடெல்லி, ஜூலை30-

நாடாளுமன்ற மக்களவையில் விதி எண் 377ன் கீழ், 'நெக்ஸ்ட்' தேர்வை தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தினார். இதுபற்றி அவர் தெரிவித்து இருப்பதாவது:

தேசிய மருத்துவ ஆணையத்தின் முரண்பட்ட தகவல்களால் தேசிய வெளியேறும் தேர்வில் (நெக்ஸ்ட்) ஒரு குழப்பமான சூழல் மாணவர்களிடையே தொடர்கிறது. கடந்த 2019ம் ஆண்டு எந்த முன்னறிவிப்பும் இல்லாமல் ஒரு மாதிரித் தேர்வு அறிவிக்கப்பட்டது, சொல்லப்போனால் மாணவர்கள் மீது அது திணிக்கப்பட்டது. அது விடைகளில் ஒன்றை தேர்ந்தெடுக்கும் கேள்வி முறை ஆகும். தேர்வுக்கு படிக்கும் போது, மாணவர்கள் மருத்துவ படிப்பிலும் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் தற்போதைய பல்கலைக்கழக பாடத்திட்டம் செய்முறை மற்றும் கல்வியறிவு இரண்டையும் மதிப்பிடுகிறது.

இதுமட்டுமின்றி மாணவர்கள் 'நெக்ஸ்ட்' தேர்வுக்காக பயிற்சி மையங்களையும் நாட வேண்டியிருக்கும்.



இது மாணவர்களுக்கு மேலும் சுமையை ஏற்படுத்தும்.

எனவே இந்த தேர்வை திரும்பப்பெறக்கோரி தஞ்சாவூர், சென்னை, திருவாரூர் மற்றும் திருச்சி மருத்துவக்கல்லூரி மாணவர்கள் இந்த மாத தொடக்கத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். தமிழ்நாடு அரசு 'நீட்' தேர்வை தொடர்ந்து எதிர்த்து வருகிறது. இந்தநிலையில் அதில் மேலும் ஒரு தேர்வை சேர்ப்பது முற்றிலும் தேவையற்றது. ஏற்றுக்கொள்ள முடியாதது. எனவே நெக்ஸ்ட் தேர்வுக்கு தடை விதிக்க வேண்டும். எதிர்காலத்தில் இதுபோன்ற தேர்வுகளை அறிமுகப்படுத்துவதை நிறுத்த வேண்டும் என ஒன்றிய அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில்

# பெண்களின் பங்களிப்பு குறைந்து வருகிறதா?

## மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 30-

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் பெண்களின் பங்களிப்பு குறைந்து வருவது ஏன்? அதை சரி செய்ய ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? என்றும், ஏப்ரல் 2022 முதல் ஜனவரி 2023 வரை மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் (MGNREGS) பணிபுரிந்த பெண் தொழிலாளர்களின் சதவீதம் என்ன? என்றும், தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா நாடாளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த ஒன்றிய ஊரக வளர்ச்சித்துறை இணையமைச்சர் சத்வி நிரஞ்சன் ஜோதி "மகாத்மா



காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் பெண்களின் பங்களிப்பு என்பது குறையவில்லை என்றும் இது திறன் சாரா உடல் உழைப்பு செய்ய விரும்பும் கிராமப்புற நபர்கள் பங்கேற்கும் கோரிக்கையின் அடிப்படையில் வழங்கப்படும் வேலைவாய்ப்பு திட்டம்" என்று தெரிவித்துள்ளார்.

மேலும் "மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் (MNREGA 2005), பயனாளிகளில் குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பகுதியினர் பதிவு செய்து வேலை கோரிய பெண்களாக இருக்கும் வகையில் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் என்பது பாலின பாகுபாடு இல்லாத நடுநிலையான ஒரு திட்டமாகும். இது ஆண்களுக்கு இணையான ஊதியத்தை வழங்குவதன் மூலம் பெண்களின் பங்கேற்பை ஊக்குவிக்கிறது. பெண்களுக்கான ஊதிய விகிதங்களின் தனி அட்டவணையை வழங்குதல், குழந்தை காப்பகத்திற்கான வசதிகள், குழந்தைகளுக்கான வேலை பக்க கொட்டகைகள் மற்றும் குழந்தை பராமரிப்பு சேவைகள் போன்றவையும் செய்து தரப்படுகிறது. தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கத்துடன் (NRLM) இணைந்து பெண்களுக்கென்று தனி குழுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் பெண்களின் பங்கேற்பை எளிதாக்கியுள்ளது. இத்திட்டம் பயனாளிகளின் குடியிருப்புக்கு அருகிலேயே பணிகளை வழங்கவும் முயற்சிக்கிறது. மேலும் தமிழ்நாட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் பெண்களின் பங்களிப்பு என்பது 85.65 சதவிகிதமாக உள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

### அரிதான நோய்களுக்கு

# சிகிச்சை அளிக்க பெறப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை?

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி!

நாமக்கல், ஜூலை 30-

டெல்லியில் கோடைக்கால மாநிலங்களவை கூட்டத் தொடர் நடைபெற்று வருகிறது. அவையில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு, சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சரிடம் அரிதான நோய்களுக்கு சிகிச்சை அளிக்க நிதி கோரி விண்ணப்பங்களின் விபரம் குறித்து கேள்வி எழுப்பினார்.

மாநிலங்களவை உறுப்பினர் நிதி ஒதுக்கீட்டின் கீழ்



அரிதான நோய்களுக்கு சிகிச்சை அளிக்க நிதி கோரி பெறப்பட்ட விண்ணப்பங்களின் விவரங்கள், அந்த விண்ணப்பங்களில் அடிப்படையில் மாநில வாரியாக எடுக்கப்பட்ட நடவடிக்கை மற்றும் வழங்கப்பட்ட நிதியின் விவரங்கள் மற்றும் அளிக்கப்பட்ட சிகிச்சைகளின் விபரம் குறித்து சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்து பேசிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் பாரதி பிரவின் பவார், அரிதான நோய்களுக்கான தேசியக் கொள்கையை (என்பிஆர்டி) மார்ச் 30, 2021 முதல் அமலுக்கு வந்தது. இதற்காக 11 சிறப்பு மையங்கள் அடையாளம் காணப்பட்டன. அரிதான நோய் உள்ள நோயாளிகளுக்கு ரூ. 20 லட்சம் முதல் ரூ. 50 லட்சம் வரை நிதியுதவி உயர்த்தப்பட்டுள்ளது.

2021-22 ஆம் நிதி ஆண்டில் 22 நோயாளிகளுக்கு ரூ.3 கோடி கர்நாடக உயர் நீதிமன்றப் பதிவேடு மூலமும் புது தில்லி எய்ம்ஸ் மருத்துவமனை நோயாளிக்கு ரூ. 15 லட்சமும் வழங்கப்பட்டது.

2022-23 ஆம் நிதி ஆண்டில் 203 நோயாளிகளுக்கு ரூ. 34.99 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான சிறப்பு மையங்களில் பதிவு செய்த உடனேயே நோயாளிகளுக்கான சிகிச்சை தொடங்குகிறது என்றார்.



திருச்சிராப்பள்ளி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில், மோட்டார் வாகன விபத்து இழப்பீடு வழக்கு நீதிமன்றம் – IIஐ சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதியரசர் எம்.நிர்மல்குமார், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் முன்னிலையில் நேற்று (29.07.2023) திறந்து வைத்தார்.



விருதுநகர் வட்டம், ரோசல்பட்டியில் நேற்று (29.07.2023) நடைபெற்று வரும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் பயன்பெற விண்ணப்பப் பதிவு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் முன்னிலையில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சென்று பார்வையிட்டு, விண்ணப்பங்களை பயோ–மெட்ரிக் முறையில் பதிவு செய்யும் பணிகளையும், முகாம்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் குறித்தும் ஆய்வு செய்தார்.